மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: **திரு.T.கோகுலகிருஷ்ணன்** **B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **ஆகஸ்ட்** மாதம் **08** ம் நாள்
**சுபகிருது** ஆண்டு **ஆடி** மாதம் **23** ம் நாள் **திங்கட்** கிழமை
CNR.No. TNMD-19-000077-2021

**I.A . No. 273/2022**

**in**

**O.S. No. 57/2021**

சௌந்தரம்மாள்

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. திரவியம்
2. லதா

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு **23.06.2022**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.**வெள்ளைச்சாமி** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.**நாகலிங்கம்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **20.07.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/வாதி கோரியுள்ள திருத்தத்தினை பிராதில் திருத்தம் செய்ய அனுமதி கோரி கட்டளை 6 விதி 17 மற்றும் சட்டப்பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கு எண். 57/21 வழக்கில் 7ம் பக்கத்தில் 2வது பரிகாரத்தில் 2,3 வரிகளில், 1 முதல் 2 பிரதிவாதிகள் எவ்வித இடையூறு செய்யாமல் இருக்கும் வகையில் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகையும் அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கும்படிக்கும் என்று உள்ளதில்

விளம்புகையும் அதனை தொடர்ந்து (Declaration with) என்ற வார்த்தையையும் நீக்கம் செய்து தாவா பிராதினை திருத்தம் செய்யும் பொருட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்**

எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர அனைத்தும் மறுக்கப்படுகிறது என்றும், வழக்கினை திசை திருப்பும் எண்ணத்துடன் காரணம் எதுமின்றி திருத்தம் செய்வதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா பரிகாரத்திற்குரிய நீதிமன்ற கட்டணம் தவறாக உள்ளது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்துள்ள நிலையில், அசல் வழக்கில் கூடுதல் நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியதை மனுதாரர்/வாதியால் அறிந்து கொண்டே அதனை திசை திருப்பும் வகையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தினை பொறுத்து மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், சமூக நீதிமன்றத்தால் தாவா பரிகாரத்திற்குரிய கூடுதல் நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்ட நிலையில் மனுதாரர்/வாதியால் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுவினால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு காலவிரையம் மற்றும் பொருட்செலவு ஏற்பட்டுள்ளதால், இம்மனுவினை காலதாமதப்படுத்தும் உட்கருத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அதிகபடியான செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு:-**

4) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

5) மனுதாரர்/வாதியால் இம்மனுவின் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து கடந்த 07.11.2008ம் தேதியில் ஏற்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை இல்லா நிலையது மற்றும் செல்லத்தக்கது அல்ல( Null and void) என்ற விளம்புகை பரிகாரம் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் அசல் வழக்கானது, எழுவினாக்கள் வனைய வேண்டி நிலுவையில் உள்ளது. இவ்வாறு அசல் வழக்கு எழுவினாக்கள் வனைய வேண்டிய நிலையில், மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களால் சமூக நீதிமன்றத்தில் அலுவலக வருடாந்திர ஆய்வு அறிக்கை நடத்தப்பட்டு அதனடிப்படையில், இம்மனுவின் அசல் வழக்கில் மனுதாரர்/வாதியால் கோரப்பட்டுள்ள 2வது பரிகாரத்திற்குண்டான விளம்புகை பரிகாரத்திற்கான தாவா சொத்து மதிப்புடைய விளம்புகை பரிகாரத்தினை தீர்வு காண்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு நிதிநிலை அதிகார வரம்பு தடை செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான திருத்தல் மனு தாக்கல் செய்யவும், நீதிமன்ற கட்டணம் செலுத்தவும் சமூக நீதிமன்றத்தால் அறிவிப்பு மனுதாரர்/வாதிக்கு கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில், மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் இம்மனுவின் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரத்தை பொறுத்து திருத்தம் செய்து கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையில், இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியல்ல, உண்மையல்ல என்றும், மனு அபிடவிட்டில் திருத்தம் செய்வதற்கான காரணங்கள் சரியாக இல்லை என்றும், நீதிமன்றத்திற்கான கட்டணம் தொடர்பாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஆட்சேபணை ஆரம்ப கட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், நீதிமன்ற நேரத்தை வீணடித்தும் மனுதாரர்/வாதி வேண்டுமென்றே நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளதாக எதிர்மனு உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனு உரையில் கண்டுள்ள சங்கதிகளை சமூக நீதிமன்றத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

8) மனுதாரர்/வாதியால் இம்மனுவில் திருத்தம் செய்ய வேண்டிய சங்கதிகள் சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கட்டளை 6 விதி 17 என்பது

**விதி 17. வாதுரைகளை திருத்துதல்**

**17. வழக்குரைகளை திருத்துதல்** - நீதிமன்றம் நடவடிக்கைகளின் எந்தக்கட்டத்திலும் நியாயமாக இருக்கலாகும் முறையிலும் நிபந்தனைகளின் பேரிலும் இருதரப்பினரின் எவர் ஒருவரையும் அவருடைய வழக்குரைகளை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு அனுமதிக்கலாம். மேலும் தரப்பினர்களிடையே விவாதத்திலுள்ள உண்மையான பிரச்சினைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு எத்தகைய திருத்தங்கள் அவசியமாக இருக்காலகுமோ அத்தகைய திருத்தங்கள் எல்லாம் செய்யப்படுதல் வேண்டும்.

**வரம்புரையாக:** மிகவும் கவனமாக இருந்தும், வழக்கு தரப்பினர் அந்த விடயத்தை விசாரணைக்கு முன் எழுப்ப முடியவில்லை என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்தாலன்றி, வழக்குரையில் திருத்தஞ் செய்வதற்கான விண்ணப்பத்தை விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது சமூக நீதிமன்றத்தால்

கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

9) மேலும் உயர்நீதிமன்ற தீர்ப்புரையில்,

2006(5) CTC 609 IN THE HIGH COURT OF MADRAS

Hi, Sheet Industries, a partnership firm carrying on business at 61-D, D.V Road, Ambur Town, Vellore District (v) Litelon Limited, having its Office at No. 68, Sipcot Industrial Complex,, Hosur, rep. by its Managing Partner, S. Gokul and others.

The Supreme Court, in para 9 of the Baldev Singh case, categorically observed as follows:

(9) ....... From a bare perusal of this provision, it is pellucid that Order 6, Rule 17 of the Code of Civil Procedure consists of two parts. The first part is that the Court may at any stage of the proceedings allow either party to amend his pleadings and the second part is that such amendment shall made for the purpose of determining the real controversies raised between the parties. Therefore, in vies of the provisions made under Order 6, Rule 17, C.P.C., it cannot be doubted that wide power and unfettered discretion has been conferred on the Court to allow amendment of the pleading to a party in such manner and on such terms as it appears to the Court just and proper. While dealing with the prayer for amendment, it would also be necessary to keep in mind that the Court shall allow amendment of pleadings if it finds that delay in disposal of suit can be avoided and that the suit can be disposed of expeditiously.'

Lordship Dr. Justice AR. Lakshmanan, through an authoritative and elaborate discussion on Order 6, Rule 17, C.P.C ., in Rajesh Kumar Agarwal's case, held as follows:

"Para 15: The object of the rule is that the Courts should try the merits of the case that come before them and should, consequently, allow all amendments that may be necessary for determining the real question in controversy between the parties provided it does not cause injustice or prejudice to the other side.

Para 16: Order 6 Rule 17, consists of two parts. Whereas the first part is discretionary (may) and leaves it to the Court to order amendment of pleading. The second part is imperative (shall ) and enjoins the Court to allow all amendments which are necessary for the purpose of determining the real question in controversy between the parties.

Para 17: In our view, since the cause of action arose during the pendency of the suit, proposed amendment ought to have been granted because the basic structure of the suit has not changed and that there was merely change in the nature of relief claimed.

Para 18 Ad discussed above, the real controversy test is the basic or cardinal test and it is the primary duty of the Court to decide whether such an amendment is necessary to decide the real dispute between the parties. It is it, the amendment will be allowed; if it is not, the amendment will be refused......... the Court should also take notice of subsequent events in order to shorten the litigation, to preserve and safeguard the rights of both parties and to subserve the ends of justice. It is settled by a catena of

decisions of this Court that the rule of amendment is essentially a rule of justice,equity and good conscience and the power of amendment should be exercised in the larger interest of doing full and completer justice to the parties before the Court.

Para 19: While considering whether an application for amendment should or should not be allowed, the Court should not go into the correctness or falsity of the case in the amendment. Likewise, it should not record a finding on the merits of the amendment and the merits of the amendment sought to be incorporated by way of amendment are not to be adjudged at the stage of allowing the prayer for amendment."

The Proviso to Order 6, Rule 17 of Act 22 of 2002 is applicable to the pleadings instituted with effect from 01.07.2002 and not to the pleadings instituted prior to 01.07.2002 and while considering the proviso to Order 6, Rule 17,the Court has to examine in detail and commencement of trial must be understood as final hearing of the Suit i.e., examination of witnesses, filing of documents addressing of arguments, etc, and the Court should not forget its unfettered discretion to allow the amendment after applying itself the judicial discretion, if there is no negligence on the part of the party.

10) மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்புரையில்,

In Mahila Ramkali Devi & Ors Vs. Nandram (Dead) through Legal Representatives & Ors.(2015)13 SCC 132

"20. It is well settled that rules of procedure are intended to be a handmaid to the administration of justice, A party cannot be refused just relief merely because of some mistake, negligence, inadvertence or even infraction of rules of procedure. The court always gives relief to amend the pleading of the party, unless it is satisfied that the party applying was acting malafide or that by his blunder he had caused injury to his opponent which cannot be compensated for by an order of cost.

21. In our view, since the appellant sought amendment in Para 3 of the original plaint, the High Court ought not to have rejected the applications

22. In Jai Jai Ram Manohar Lal V. National Building material Supply (1969 AIR 1267), this Court held that the power to grant amendment to pleadings is intended to serve the needs of justice and is not governed by any such narrow or technical limitations.

இவ்வாறு மாண்புமிகு உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ள கருத்துரைகளை சமூகம் நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

9) இம்மனுவின் அசல் வழக்கு எழுவினாக்கள் வனையப்படாமல் நிலுவையில் இருந்து வரும் நிலையிலும், எழுவினாக்கள் வனையப்படுவதற்கு முன்பு மனுதாரர்/வாதியால் அசல் வழக்குரையை திருத்தம் செய்திட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், திருத்தம் செய்ய வேண்டிய சங்கதிகளை பொறுத்து சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்டதில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட

எதிர்வழக்குரைக்கு எவ்வகையிலும் பாதகமாக இல்லை என இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், இந்த மனு அனுமதிக்கப்படுவதினால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அசல் வழக்கில் எதிர்வாதம் செய்யப்படுவதில், எந்த வகையிலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இந்த மனுவில் திருத்தம் செய்யக்கூடிய சங்கதிகள் என்பது அசல் வழக்கில் உண்மையான பரிகாரத்தன்மையை மாற்றம் செய்யும் விதத்திலோ அல்லது புதிய வழக்கு மூலத்தை உருவாக்கும் விதத்திலோ இல்லை என இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

10) இருப்பினும் மனுதாரர்/வாதியால் காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்படுவதாக இந்த நீதிமன்றத்தில் அறிந்து கொள்ள முடிவதாலும், எதிர்மனு உரையில் கண்டுள்ள சங்கதிகளின்படி மனுதாரர்/வாதியால் திருத்தல் மனு சமூக நீதிமன்றத்தில் வழிகாட்டுதலின்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிந்து கொள்ள முடிவதாலும், இம்மனுவின் செலவு தொகையாக மனுதாரர்/வாதி ரூ.500/- எதிர்வரும் 17.08.2022 தேதிக்குள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலுத்தி வைக்கப்பட வேண்டியது என்றும், அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படும் என உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்/வாதி இம்மனுவிற்கான செலவு தொகையாக ரூ.500/- எதிர்வரும் 17.08.2022 தேதிக்குள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலுத்தி வைக்க வேண்டியது என உத்தரவு பகரப்படுகிறது. அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படும் என உத்தரவு பகரப்படுகிறது.

வழக்கு விசாரணை நாள்: 18.08.2022

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் :**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் :**</u> இல்லை

ஓம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.